**Minutes of the Public Hearing held on 21.02.2019 at 11. 00 AM at Kullampatti Social Community Hall, Arasiramani, Sankagiri Taluk, Salem District for the proposed Colour granite quarry of M/s.Tamilnadu Minerals Limited,**

**Name of the Project:**

M/s. Tamil Nadu Minerals Limited (Arasiramani Colour granite Quarry) Proposed mining of saleable quantity of colour granite - 18162 $m^3$ over an extent of 16.12 Ha at SF.No. 516/1, 518/4 & 534, Arasiramani Village, Sankagiri Taluk, Salem District.

**List of Government Officials Participated in the meeting:**

1. Tmt.K.Santhi,
   Special District Revenue Officer, Highways(L/A),
   Salem.
2. Tmt. D. Jeyalakshmi,
   District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Kumarapalayam.
   Convener of Public Hearing Meeting.
3. Thiru.S. SenthilKumar,
   Assistant Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Kumarapalayam.
4. Thiru. P.Krishnan,
   Assistant Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Kumarapalayam.
5. Thiru. A.Balamurugan,
   Deputy Director,i/c., Department of Geology & Mining, Salem.
6. A.K. Prakash,
   Special Tahsildar (Mines),
   Salem.
7. R.Appu,
   Sub inspector of Police,
   Thevur Police Station,
   Salem District.
8. Pradeepkumar,
   Village Administrative officer
   Arasiramani Bit-I Village,
   Salem District.
9. P.Sundar,
   Work Inspector (PWD),
   Kullampatti,
   Salem District
10. A.Kavitha,
    Assistant,
    Arasiramani Bit I – Village,
    Salem District
11. S.Sellamuthu,
    Junior Assistant,
    Arasiramani Town Panchayat,
    Salem District
12. R.Karuppannan,
    Village Administrative officer
    Arasiramani Bit-II Village,
    Salem District.

13. V. Venkatesh Babu,
Surveyor,
Thevoor - Pirka

**List of participants related to this project:**

1. Thiru.E.Ganesan
Dy.Manager (M.L),
Tamilnadu Minerals Limited,
Chennai

2. K.Vijayakumar
Dy. Manager (E.L),
Tamilnadu Minerals Limited,
Chennai

3. Thiru. R.N. Sankar,
Divisional Manager,
Tamilnadu Minerals Limited,
Mettur Dam, Salem District

4. M.Raja,
Tamilnadu Minerals Limited,
Mettur Dam, Salem District

5. P.Sampath,
Tamilnadu Minerals Limited,
Mettur Dam, Salem District

6. G. Murugan,
Tamilnadu Minerals Limited,
Mettur Dam, Salem District

7. M. Mathivanan,
Tamilnadu Minerals Limited,
Mettur Dam, Salem District

8. P.Manivannan,
Tamilnadu Minerals Limited,
Mettur Dam, Salem District

9. N. Vamsi Krishna,
EIA Consultant and Co-Ordinator,
HECS, Chennai.

10. D. Rajani,
EIA Consultant and Co-Ordinator,
HECS, Chennai.

11. K.Pavithran,
EIA Consultant and Co-Ordinator,
HECS, Chennai.

Totally 59 members participated including government officers, project proponent and other public (Enclosure vide Annexure-A).

The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Kumarapalayam has welcomed the Special District Revenue Officer, Salem, the officials from M/s. Tamilnadu Minerals Limited and Public who have participated in the public hearing.

After welcome address the District Environmental Engineer has informed that, the unit of M/s.Tamilnadu Minerals Limited has applied for Environmental Clearance for its proposed colour granite quarry at SF.No.516/1, 518/4 & 534 about 16.12.0 Ha.

Arasiramani Village, Sankari Taluk, Salem Dt. and as per EIA notification 2006 public hearing has to be conducted.

The Special District Revenue Officer has instructed the officials of Tamilnadu Minerals Limited to make presentation about the proposed Colour granite quarry.

Thiru E. Ganesan, Deputy Manager of Tamilnadu Minerals Limited, Chennai has explained the salient features of the project such as Environmental Impacts on quarrying procedures, Equipments used, Employment opportunity, Environmental monitoring, Health, Safety, DMP, EMP, Safety measures, Green belt development and Corporate Social Responsibilities(CSR) activities in detail.

Then, the Special District Revenue Officer has asked the public to present their views on the project.

The views of the public are as follows:

**1.Th.Sinnusamy, Arasiramani**

**Question:** He expressed his no objection for the proposed project and welcomed the proposed colour granite quarry by M/s. Tamilnadu Minerals Limited and requested to intimate whether the quarry operation affect water bodies.

**Dy.Manager: Reply:** Quarrying operation will be carried out upto the depth of 30m. So, water bodies were not get affected.

**2.Th.Thangadurai - Arasiramani**

**Question:** He asked to intimate whether, the blasting work affect public and cattles?

**Dy.Manager: Reply:** Blasting work will be carried out weekly once. During the time of blasting all the precautionary measures will be followed as per the explosives Act. Therefore, public were not get affected in any way.

**3.Th.Rajendran - Arasiramani**

**Question:** He asked the company to rectify the road & Channel and Is there any possibilities for road damage due to movement of the Heavy Truck Carrying granite blocks, because peoples were going for temple which is located nearby the quarry.

**Dy.Manager: Reply:** The project has proposed to produce less than 10cbm of blocks and weight is very less. Therefore, the truck movements will not affect the road. Also, if any damages found in future after carrying out the rectification the transportation will be carried out.

**4. Special District Revenue Officer,**

**Question:** Weekly, how many times water sprinkling will be carried out to suppress dust pollution.

**Dy.Manager: Reply:** Water sprinkling will be carried out regularly since 8.00 AM till the process ends.

**5. Th.Ramachandran, Arasiramani,**

**Question:** The proposed quarry shall give Economy to our state & Country by selling the blocks to Domestic as well as abroad and he expressed his no objection for starting the mines. Also, he requested the company to do basic facilities for very old Thennuthu Temple located nearby the quarry. Also, Due to movement of heavy vehicle, traffic leads to congestion in the village road and whether the TAMIN can take any steps to widen the road?

**Dy. Manager: Reply:** Necessary steps will be taken with the consultation of local panchayat executives.

Finally, the District Environmental Engineer thanked the gathering and the public hearing concluded.

Enclosure:

1. Attendance details of the Meeting (A).
2. Hard copy of power point presentation (B).
3. Compact Discs (Video & Audio recorded)

27/2/19

DISTRICT ENVIROMENTAL ENGINEER
TNPCB, KUMARAPALAYAM

2/3

SPL.DISTRICT REVENUE OFFICER
SALEM.

**சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அரசிராமணி, குள்ளம்பட்டி சமுதாய நலக்கூடத்தில் 21.02.2019 அன்று 11.00 மணிக்கு நடைபெற்ற திருவாளர்கள்.தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் (அரசிராமணி கலர் கிரானைட் குவாரி) சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டு ஆணையத்தின் அனுமதி பெறுவதற்கான பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்:**

திட்டத்தின் பெயர்: தி/எ். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட்(அரசிராமணி கலர் கிரானைட் குவாரி) பரிந்துரைக்கப்பட்ட சுரங்கம் விற்பனைக்குகந்த உற்பத்தி - 18162 மீ³ விஸ்தீரணம் - 16.12 ஹெக்டர், புல எண் 516/1, 518/4 & 534, அரசிராமணி கிராமம், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.

**கூட்டத்தில் கலந்து கொண்ட அரசு அலுவலர்கள்:**

1. திருமதி.கே.சாந்தி
   தனி மாவட்ட வருவாய் அலுவலர்,
   சேலம் நெடுஞ்சாலை நிலம் எடுப்பு அலுவலகம்.
2. திருமதி.த.ஜெயலட்சுமி
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   குமாரபாளையம்.
3. திரு. சு.செந்தில்குமார்
   உதவி பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   குமாரபாளையம்.
4. திரு. ப. கிருஷ்ணன்
   உதவி பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   குமாரபாளையம்.
5. திரு. ஏ.பாலமுருகன்
   துணை இயக்குநர்(பொ),
   புவியியல் மற்றும் சுரங்கத்துறை,
   சேலம்.
6. ஏ.கே. பிரகாஷ்,
   தனி வட்டாட்சியர் (கனிமம்)
   சேலம்.
7. ஆர். அப்பு,
   காவல்துறை உதவி ஆய்வாளர்,
   தேவூர் காவல் நிலையம்,
   சேலம் மாவட்டம்.
8. பிரதிப்குமார்
   கிராம நிர்வாக அலுவலர்,
   அரசிராமணி பிட் - 1 கிராமம்,
   சேலம் மாவட்டம்.
9. பி. சுந்தர்
   பணி ஆய்வாளர்(பொதுப்பணித்துறை)
   குள்ளம்பட்டி.
   சேலம் மாவட்டம்.
10. A. கவிதா
    இளநிலை உதவியாளர்
    அரசிராமணி பிட் - 1 கிராமம்,
    சேலம் மாவட்டம்.
11. செ. செல்லமுத்து,
    இளநிலை உதவியாளர்,
    அரசிராமணி பேரூராட்சி,
    சேலம் மாவட்டம்.
12. ஆர். கருப்பண்ணன்,
    கிராம நிர்வாக அலுவலர்,
    அரசிராமணி பிட் - 1 கிராமம்,
    சேலம் மாவட்டம்.
13. வீ. வெங்கடேஷ்பாபு,
    குறு வட்ட அளவர்,
    தேவூர் பிர்க்கா.

திட்டத்தின் சார்பாக கலந்து கொண்டவர்கள்:

1. திரு.இ.கணேசன்
   துணை மேலாளர் (எம்.எல்),
   தமிழ்நாடு கனிம நிறுவனம்,
   சென்னை.

2. கே. விஜயகுமார்
   துணை மேலாளர்(இ.எல்),
   தமிழ்நாடு கனிம நிறுவனம்,
   சென்னை.

3. திரு.என்.ஆர்.சங்கர்,
   கோட்ட மேலாளர்,
   தமிழ்நாடு கனிம நிறுவனம்,
   மேட்டூர்.

4. எம். ராஜா,
   தமிழ்நாடு கனிம நிறுவனம்,
   மேட்டூர் அணை.

5. பி. சம்பத்,
   தமிழ்நாடு கனிம நிறுவனம்,
   மேட்டூர் அணை.

6. ஜி. முருகன்
   தமிழ்நாடு கனிம நிறுவனம்,
   மேட்டூர் அணை.

7. எம். மதிவாணன்
   தமிழ்நாடு கனிம நிறுவனம்,
   மேட்டூர் அணை.

8. பி. மணிவண்ணன்,
   தமிழ்நாடு கனிம நிறுவனம்,
   மேட்டூர் அணை.

9. என். வம்சி கிருஷ்ணா,
   EIA ஆலோசகர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்,
   HECS, சென்னை.

10. டி. ரஜனி,
    EIA ஆலோசகர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்,
    HECS, சென்னை.

11. கே. பவித்ரன்
    EIA ஆலோசகர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்,
    HECS, சென்னை.

**கருத்துக் கேட்புக் கூட்டத்தில் அரசு அலுவலர்கள், நிறுவனத்தினர் மற்றும் பொதுமக்கள் உட்பட 59 நபர்கள் கலந்து கொண்டார்கள் (இணைப்பு - A).**

தொடக்கமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், குமாரபாளையம் அவர்கள் திருவாளர்கள்.தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் அரசிராமணி வண்ணக்கல் சுரங்கத்தின் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு தலைமை வகித்த தனி மாவட்ட வருவாய் அலுவலர், சேலம் அவர்களையும், இதர அலுவலர்களையும் பொதுமக்கள் அனைவரையும் முதற்கண் வரவேற்றார்.

இந்த கூட்டமானது தமிழ்நாடு கனிம நிறுவனம், சங்ககிரி வட்டம், அரசிராமணி கிராமம் புல எண்.516/1, 518/4 மற்றும் 534, 16.12 ஹெக்டேர் பரப்பளவில் வண்ணக்கல் வெட்டியெடுக்க சுற்றுச்சூழல் அனுமதி கோரி விண்ணப்பித்திருப்பதால் அதன் பொருட்டு இந்த பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறுவதாக தெரிவித்தார்.

பிறகு தனி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் வண்ணக்கல் சுரங்கம் தொடர்பாக செயல் திட்டத்தின் விளக்கங்களை கேட்ட பின்னர் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எந்தவித தயக்கமும் இன்றி தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சார்பில் திரு.இ.கணேசன், துணைமேலாளர் அவர்களால் குவாரியிலிருந்து வண்ணக்கல் எடுப்பதால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தாக்கம் குறித்தும், சுரங்க திட்டத்தின் செய்முறை, பயன்படுத்தப்படும் இயந்திரங்கள், சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு திட்டங்கள், சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம், பேரிடர் மேலாண்மை திட்டம், பாதுகாப்பு நடவடிக்கைகள், பசுமை அரண் அமைத்தல், ஒலி சூழல், வேலை வாய்ப்பு, சுற்றுச்சூழல் மாசு குறைய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மற்றும் சமூக பொறுப்பு குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேற்கண்ட செயல்திட்ட விரிவுரைக்கு பின்னர் பொதுமக்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

கருத்துக் கேட்பு கூட்டத்தில் பங்கு பெற்ற பொதுமக்களின் கருத்துக்கள் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டது.

1.திரு.சின்னுசாமி, அரசிராமணி.

**கேள்வி :**தமிழ்நாடு கனிம நிறுவனம் இப்பகுதியில் துவங்குவதை வரவேற்றார். மேலும்,இத்திட்டத்தினால் நீர்நிலைகள் பாதிக்கப்படுமா?

**டாமின், துணை மேலாளர் பதில்:** 30 மீ ஆழம் வரை மட்டுமே பணி செய்யப்படும். எனவே, நீர் நிலைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று தெரிவித்தார்.

2.திரு.தங்கதுரை, அரசிராமணி.

**கேள்வி :** வெடி வைக்கும்போது பொது மக்களுக்கும், கால்நடைகளுக்கும் ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா?

**டாமின்,துணை மேலாளர் பதில்:** வாரத்திற்கு ஒருமுறை தான் வெடி வைக்கப்படும். அப்படி வெடி வைக்கும்போது பாதுகாப்பு நெறிமுறைகளின்படி 300 மீட்டர் சுற்றளவுக்கு நான்கு பக்கமும் ஆட்கள் மூலம் எச்சரிக்கை செய்யப்பட்டு விசில் ஒலி செய்து பின்னரே வெடி வைக்கப்படும். எனவே, எந்த பாதிப்பும் ஏற்படாது.

3.திரு.ராஜேந்திரன், அரசிராமணி

**கேள்வி:** குவாரிக்கு அருகாமையில் உள்ள கோயிலுக்கு பொதுமக்கள் சென்று வருவதால், தங்கள் நிறுவனத்திலிருந்து கற்களை கனரக வாகனம் மூலமாக கொண்டு செல்லும்போது போக்குவரத்து சாலைகள், கால்வாய்கள் சரிசெய்து செல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

**டாமின்,துணைமேலாளர் பதில் :** 10 கனமீட்டர் அளவுக்கு கீழ் அளவுள்ள கற்கள் தான் வெட்டி எடுத்துச் செல்லப்படும். அவை எடை குறைவாக இருப்பதால் சாலைகள் பாதிக்கப்படாது. மேலும் சாலையில் ஏதாவது குழி ஏற்படும் பட்சத்தில் அவற்றை சரிசெய்து எடுத்து செல்லப்படும் என்று தெரிவித்தார்.

4.தனிமாவட்ட வருவாய் அலுவலர்.

**கேள்வி :** காற்று மாசினை குறைக்க சாலையில் தண்ணீர் தெளிக்கும் பணி எப்படி கடைபிடிக்கப்படுகிறது.

**டாமின், துணை மேலாளர் பதில்:** குவாரி பகுதியில் காலை 8 மணியளவில் தண்ணீர் தெளிக்கும் பணி செய்யப்படும் மற்றும் இவை தொடர்ந்து கடைபிடிக்கப்படும் என்று தெரிவித்தார்.

5.திரு.ராமச்சந்திரன், அரசிராமணி.

**கேள்வி:** இந்த கனிம நிறுவனமானது இங்கு தொடங்கி கற்களை எடுத்து உள்ளூர் மற்றும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதால் நமது நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும், எனவே இச்சுரங்கம் வருவதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தார். மேலும் அருகிலுள்ள பழங்காலத்து தென்னுத்து கோயிலை சீர்செய்தும் மற்றும் கனரக போக்குவரத்தால் சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதை சரிசெய்யவும் கேட்டுக்கொண்டார். எனவே, சாலையின் அகலத்தை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

டாமின், துணை மேலாளர் பதில்: பேரூராட்சியிடம் கலந்து ஆலோசித்து தக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

இறுதியில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்த பின் கூட்டம் முடிவடைந்தது.

இணைப்பு:
1. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேடு (A)
2. கணினி விளக்கக் காட்சி கையேடு (B)
3. கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கையை பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள்

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
குமாரபாளையம்

தனி மாவட்ட வருவாய் அலுவலர்,
சேலம்.